**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20- ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| O.S.No. | : 454/2023 | வா.சா. | : 1 |
| பெயர் | : திரு. அஜய் | | |
| த/பெ. | : திரு. நம்பி | | |
| கிராமம் | : | சாதி | : |
| தாலுக்கா | : | சமயம் | : |
| வயது | : 38 | தொழில் | : |

**முதல் விசாரணை :**

நான் வாதி வங்கியில் துணை மேலாளராக பணியாற்றி வருகிறேன். முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாகத் தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தை எனது முதல்விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். 24-09-2021 தேதியிட்ட வாதி வங்கிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த எக்ஸ்பிரஸ் தனிநபர் கடன் விண்ணப்பம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 24-09-2021 தேதியிட்ட பிரதிவாதிக்கு எக்ஸ்பிரஸ் தனிநபர் கடன் அனுமதி வழங்கிய குறிப்பாணை அசல் வா.சா.ஆ.2 ஆகவும், 24-09-2021 தேதியிட்ட பிரதிவாதி எழுதிக்கொடுத்த சீரமைப்பு சம்மதக்கடிதம் அசல் வா.சா.ஆ.3 ஆகவும், 24-09-2021 தேதியிட்ட பிரதிவாதி எழுதிக்கொடுத்த எக்ஸ்பிரஸ் தனிநபர் கடனுக்கான ஒப்பந்தப்பத்திரம் அசல் வா.சா.ஆ.4 ஆகவும், பிரதிவாதி

எழுதிக்கொடுத்த வங்கியின் விதிமுறைகள் ஒப்புதல் அசல் வா.சா.ஆ.5 ஆகவும், 24-09-2021 தேதியிட்ட பிரதிவாதி வாதி வங்கிக்கு வழங்கிய ஒப்புதல் படிம் அசல் வா.சா.ஆ.6 ஆகவும், 27-02-2021 தேதியிட்ட பிரதிவாதியின் சம்பளப்பட்டியல் சுயசான்றிட்டது வா.சா.ஆ.7 ஆகவும், 01-04-2021 தேதியிட்ட பிரதிவாதியின் சம்பளப்பட்டியல் சுயசான்றிட்டது வா.சா.ஆ.8 ஆகவும், 30-04-2021 தேதியிட்ட பிரதிவாதியின் சம்பள பட்டியல் சுயசான்றிட்டது வா.சா.ஆ.9 ஆகவும், May 2021 பிரதிவாதியின் சம்பள பட்டியல் சுயசான்றிட்டது வா.சா.ஆ.10 ஆகவும், ஜுன் 2021 பிரதிவாதியின் சம்பள பட்டியல் சுயசான்றிட்டது வா.சா.ஆ.11 ஆகவும், ஜுலை 2021 பிரதிவாதியின் சம்பள பட்டியல் சுயசான்றிட்டது வா.சா.ஆ.12 ஆகவும், ஆகஸ்டு 2021 பிரதிவாதியின் சம்பள பட்டியல் சுயசான்றிட்டது வா.சா.ஆ.13 ஆகவும், பிரதிவாதி பணியுரியும் அலுவலகத்தில் வழங்கப்பட்ட அடையாள அட்டை சுயசான்றிட்டது வா.சா.ஆ.14 ஆகவும், பிரதிவாதியின் ஆதார் அடையாள அட்டை சுயசான்றிட்டது வா.சா.ஆ.15 ஆகவும், பிரதிவாதியின் பான் அடையாள அட்டை சுயசான்றிட்டது வா.சா.ஆ.16 ஆகவும், பிரதிவாதியின் சேமிப்பு கணக்கு புத்தகம் சுயசான்றிட்டது வா.சா.ஆ.17 ஆகவும், 08-03-2023 தேதியிட்ட வாதி வங்கியினர் பிரதிவாதிக்கு அனுப்பிய கடிதம் ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.18 ஆகவும், திருப்பப்பட்ட அஞ்சலக கவர் அசல் வா.சா.ஆ.19 ஆகவும், 13-05-2023 தேதியிட்ட வாதி வங்கியினர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீதுடன் அலுவலக நகல் வா.சா.ஆ.20 ஆகவும், பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.21 ஆகவும், திருப்பப்பட்ட அஞ்சலக கவர் அசல் வா.சா.ஆ.22 ஆகவும், பிரதிவாதி, வாதி வங்கிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.23 ஆகவும்,

பிரதிவாதி கடனுக்குண்டான கணக்கு பட்டியல் சான்று நகல் வா.சா.ஆ.24 ஆகவும் குறியீடு செய்யவேண்டுகிறேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**